# DEPOSITION OF WITNESS

## BEFORE THE S.O - CUM- ASJ COURT, AT PUDUCHERRY

## DEPOSITION OF PW1

## MCOP No. 376/2023

Name of the witness : Kaalidasan
Father’s name : Ramu

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 and Act 44 of 1969 on this the 13th day of March 2025.

**குறுக்கு விசாரணை:**

விபத்து 21.02.2023 மதியம் 03.15 மணியளவில் நடந்தது. விபத்து சமயம் நான் இருச்சக்கவர வாகனம் ஓட்டிச்சென்றேன். அதன் பதிவு எண். PY05Y9666 ஆகும். நான் தெற்கிலிருந்து வடக்காக வந்தேன். 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு எண். PY05Z9788 . 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் என்னை இடிக்கும்பொழுது நான் பார்க்கவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் என் வாகனத்தின் மீது டேங்கின் முன்பக்கம் இடித்தது. விபத்து நடந்த இடம் எட்டுவழி சாலை என்றால் சரிதான். விபத்தில் இரண்டு இருச்சக்கர வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் என் பின்னால் வந்து இடித்தார். நான் சிக்னலில் நின்றுகொண்டிருந்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. மதசாஆ 11 மாதிரி வரைபடம் நான் தாக்கல் செய்தது அதில் போக்குவரத்து காவல்துறையினர் இரு வாகனங்களும் நேருக்நேர் மோதிக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். விபத்தில் எனக்கு மூக்கு மற்றும் பல்லில் அடிப்பட்டது. நான் விபத்தன்று ஹெல்மெட் போடவில்லை என்றால் சரிதான். அடிப்பட்டவுடன் நான் வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன் பின்பு ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனை அரும்பார்த்தபுரம், புதுச்சேரிக்கு சென்றேன். வில்லியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேல் சிகிச்சைக்கு செல்லுமாறு என்னை அனுப்பினார்கள் அதற்கு குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. விபத்தில் எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டதால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு முதலுதவி செய்துவிட்டு வீட்டிற்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. மதசாஆ 14-ற்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மதசாஆ 14 வழக்கிற்காக நானே தயார் செய்தது என்றால் சரியல்ல. மதசாஆ 13 எந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டதோ அந்த நிறுவனத்தின் முத்திரை இல்லை என்றால் சரிதான். மதசாஆ 13 -ற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் அதை நானே வழக்கிற்காக தயார்செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வேலை செய்திருந்தால் எனது சம்பள ரசீது மற்றும் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மதசாஆ 15 மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான ஆவணங்கள் இல்லை என்பதால் நான் 2-ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. விபத்து முழுக்முழுக்க என் அஜாக்கிரதையால்

ஏற்படுத்திக்கொண்டேன் என்பதால் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

**Take down by me in the open court and interpreted to the deponent and acknowledge by him / her to be correct.**

**Presiding Officer**
**Special Officer cum Additional Sub-Judge**
**Puducherry**